அ.வ.எண்.99/2015

பெயர் – சுப்ரமணியன் (பி.வா.சா.1)

நாள் – 27.09.2022

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி</u>

சர்வே எண்.53, 39, 76, 77, 78, 79 மற்றும் 94 கங்கரக்கோட்டை கிராமம் உட்கிடை தூங்காரெட்டியபட்டி கிராமத்தில் இருந்து லட்சுமியாபுரம் செல்லக்கூடிய வண்டிபாதை உள்ளதா என்றால் 21ஏ, 39, 53, 76, 77, 79 மற்றும் 98 ஆகிய சர்வே எண்களில் வண்டிபாதை செல்கிறது. பிரதிவாதி சுப்புராஜ்க்கு பாத்தியப்பட்ட சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்கள் 53, 39, 76, 77, 78, 79 மற்றும் 94 ல் உள்ள வண்டிபாதையைத்தான் லட்சுமியாபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள மக்கள் வண்டிபாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். வாதியின் சொத்துக்கு எந்த பக்கத்தில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் வடக்கு பக்கத்தில் உள்ளது. எனது சொத்தை எந்த வழியாக சென்று அனுபவித்து வருகிறேன் என்றால் வண்டிபாதை வழியாகத்தான் எனக்கு தெரிய 70 வருடமாக சென்று எனது சொத்தை அனுபவித்து வருகிறோம். லட்சுமியாபுரத்திற்கு இந்த பாதை தவிர வேறு பாதை உண்டா என்றால் வேறு பாதை கிடையாது. இப்பவும் அந்த பொது பாதை புழக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். மறித்த இடத்தை தவிர மற்ற இடங்கள் எல்லாம் பயன்பாட்டில் உள்ளது.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.